26613

# நமது சாம்ராஜ்யம்.

ஒரு நாடகம்

(18310)

மதுவிலக்கின் தேவையும்
ஆசிரியர்களின் சேவையும்
அடங்கிய இனிய பாட்டுகளுடன்

பெரியோர் பலர்
பாராட்டுரைகளுடன்

எழுதியவர்
திரு மா. முருகேசன்,
(ஆம்பூர் இந்து ஆரம்பப்பள்ளி, ஆசிரியர்)

அச்சகம்
ஸ்ரீ சரஸ்வதி பிரஸ், ஆம்பூர்.

பிரதிகள் கிடைக்குமிடம்
**திரு. மா. முருகேசன், ஆசிரியர்.**
சான்றோர்குப்பம், தபால்.
விலை 2 அணா ஆம்பூர். வ. ஆ ஜில்லா

ஆம்பூர் நகராண்மைக் கழக ஆணையாளர்

## திரு. C. R. நாராயணசுவாமி முதலியார் B. A.,

அவர்கள் மகிழ்ந்தளித்த

# பாராட்டுரை.

ஆசிரியர் திரு. மா. முருகேசன் அவர்கள் எழுதியுள்ள **"நமது சாம்ராஜ்யம்"** என்ற சிறு நாடகம் **(வில்லுப்பாட்டு)** எளிய மெட்டுகளுடன் கூடிய சில பாட்டுகளுடன் இருப்பதைப் படித்து மகிழ்ந்தேன். இது பேராசிரியர் டால்ஸ்டாய் எழுதிய ஒரு சிறு கதையைத் தழுவியதாகும். யாவரும் படித்து உணரக்கூடிய சுலபமான தமிழில் எழுதப்பட்டிருக்கிறது.

மதுவிலக்குத்திட்டம் அமுலில் இருந்தும் அநேகர் மதியிழந்து, மதுவையே நாடித் தீங்கிழைக்கின்றனர். அப்படிப்பட்டவர்கட்கு இது ஒரு நல்ல நெறியைப் புகட்டுகின்றது. மதுவின் கொடுமையைப்பற்றியும், அதை ஒழிக்க உபாத்தியாயர் ஒருவர் தந்திரமாக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும் இந்த நாடகத்தில் விவரித்துள்ளதைப் படிப்பவர்கள் இன்புறுவார்கள்.

பள்ளி மாணவ, மாணவிகள் இதை நடித்துக் காட்டி நல்ல நெறியைப் புகட்டலாம். இதை உண்டாக்கிய ஆசிரியரை நான் பெரிதும் பாராட்டுகின்றேன்.

ஆம்பூர்,
17-12-'52.

(ஒப்பம்) **C. R. நாராயணசுவாமி முதலியார்.**
நகராட்சி ஆணையாளர்.

# நமது சாம்ராஜ்யம்

## 26–4–'52 அன்று ஆம்பூர் ஆரம்ப ஆசிரியர் சங்க ஆண்டுவிழாவில் அரங்கேறிய

# வில்லுப் பாட்டு

18310

---

**காட்சி : 1** **இடம் :** [illegible],

(கழனிக்கு கவலை ஓட்டிக்கொண்டிருக்கிருன் கந்தசாமி.
ஆசிரியர் அன்பழகன் பாடிக்கொண்டே வருகிருர்.)

**நாடு செழிக்கவேணும் என்ற மெட்டு.**

**அன் :–** அன்னையும் தந்தையுமே தெய்வங்கள் என்று
அன்புடனே போதிப்பாரே வாத்திமார்கள்
பின்னையும் உள்ள இன்பம் பலவும் பெற
புத்திசாலி ஆக்குவாரே வாத்திமார்கள்
கல்விக்குப் பணி புரிவார் வாத்திமார்கள்
கலைகளையும் தாமறிவார் வாத்திமார்கள்
நல்லதோர் தொண்டுதனை வாத்திமார்கள்
நாடி ஓடித் தேடிக் கொண்டார் வாத்திமார்கள்
(அன்னை)

**கந் :–** வாங்க வாங்க வாத்தியாரையா! கும்புடறேன் பாருங்க என் பொழப்பு கூழுக்குப் பாட்டும், சோத்துக்குத் தாளமுமா இருக்குது. மழையில்லை, விளைவில்லை, விதை நெல்கூட அறுவடையிலே கிடைக்கலே போங்களேன். கறம்பு நிலத்துக்கும், வடிஞ்ச கிணற்றுக்கும், எலும்பு மாட்டுக்கும், முதுகிலே ஒட்டிய வயித்துக்கும் சொந்தக்காரன் நான். உங்க பாடு தேவலை. மாசா மாசம் சம்பளம்!

**அன்:**— கந்தசாமி! நானும் உன்னைப்போல ஒரு விவசாயி— உழவன்தான்!

**கந்:**— அதெப்படிங்க?

**அன்:**— எப்படியா? சொல்றேன் கேளு. (பாடுகிறார்)

**அன்பே கடவுள் என்றது எதனாலே**

**என்ற மெட்டு.**

சாதிமத மேடுபள்ளம் சமமாக்கி,—யாரும்
சகல உரிமை பெறும் நீரும் பாய்ச்சி
நீதியற்ற கோணல் செடி களைப் பிடுங்கி,—தாய்
நாட்டு மக்களாம் பயிரை வளர்த்திடுவோம் (சாதி)

**அன்:**—இக்கரைக்கு அக்கரை பச்சைபோலத்தான் தெரியும் அப்பா. உன் சங்கதியைச் சொல்லு உன்னுடைய

சௌக்கியம் எப்படி? குடும்பம் எப்படி?

**கந்:**— ஏதோ இருக்கறம், நீங்க ஏதோ படிக்க போயிட்டிங்களாம். நான் 2-ம் கல்யாணம் ஒண்ணு கட்டிகிட்டேன். அவதான் முதல் சம்சாரம் போயிட்டாளே! இவ குட்டி பலே சோக்குக்காரி – சுத்தக் கிளிதான் போங்க!

**அன்:**— அதென்னப்பா சுத்தக்கிளியும், சுத்தமில்லாத கிளியும்!

**கந்:**— கோவம் வர்றதிலே திமீர் திமீர்னு மூக்கு கோவப் பழம்போல செவந்திடுது. கொஞ்சம் சிவந்தா கிளி! கூட சிவந்தா குரங்கு!

**அன்:–** கோபம் உள்ளவரிடம்தான் குணமும் இருக்கும்!

**கந்:–** அதோ வரா. கேளுங்களேன் அவள் பாட்டை! ராசபாட்டைதான் போங்க.

**(பச்சை பாடிக்கொண்டு வருகிருள்.)**

**பச்:–** **தங்கந்தில்லாலே மெட்டு.**

குளந்தைகுட்டி பசியாற
குலத்தொழிலு மேல்மேலும்

வளர்ந்து வரவரந்தாணும் கங்கையம்மாளே
வந்துநீயும் காக்கவேணும் மங்கையம்மாளே.

காலையிலே எந்திரிச்சி
கவிலை மாட்டை ஓட்டிக்கிட்டு

காத்தா பறந்துவந்தியே கண்ணு மச்சானே—பழங்
கஞ்சிகொண்டாரேன்பாரு பொன்னு மச்சானே.

**பச்:–** ஏ மச்சான்!

**கந்:–** ஏன் புள்ளை?

**பச்:–** அது யாரு?

**கந்:–** வாத்தியாரு!

**பச்:–** அப்பமின்னு பரவாயில்லை. நம்பலாம். இருவர்றன்.

**கந்:–** ஏன் புள்ளை! கஞ்சி எனக்கு மட்டும்தானு?

**பச்:–** இல்லை, மச்சான்! 2 பேருக்கும்தான்.

**கந்:—** இல்லை, நம்ம வாத்தியாரய்யா திடீர்னு ஊர்லேருந்து வருவாருன்னு உனக்கு சோசியம் தெரிஞ்சதா?

**பச்:—** என்ன மச்சான் இப்படி வெளிச்சமா கேக்கிறே?

**கந்:—** என் இருட்டிலே கேக்கணுமா?

**பச்:—** அட நீ ஒண்ணு!

**கந்:—** ஆமாம் நான் ஒண்ணு! நீ ரெண்டு. இன்னும் ஆறு மாசத்திலே மூணு!

**பச்:—** நானும் உங்கூட சாப்பிடலாம்னு கொண்டாந்தேன் வாத்தியாருக்கும் ஆவும்.

**கந்:—** அரையுங் குறையுமா ஊத்தி அனுப்பலாங்கிறியா?

**பச்:—** என்னபோ மச்சான்! வாத்தியாருங்களுக்கு புள்ளை யுங் குட்டியும் நிறைய, சம்பளமும் குறைய. அவங்க எப்ப வயிருர சாப்பிட்டிருக்கப் போ ருங்க? வயிறில்லாத மனிசர் தானே?

**கந்:—** அப்படிண்ணு வாங்கையா வயிருர சாப்புடுவம்!

**அன்:** நான் சாப்பிட்டாச்சு. வயலைச்சுற்றி வருகிறேன். உங்கள் பங்கு ஆகட்டும். (ஒருபுறம் போகிருர்)

**(குட்டிப்பேய் ஒன்று மறைந்து மறைந்து வருகிறது)**

**குட்டி:—**எங்கராசா சொல்ருர் எங்க சாம்ராஜ்ஜியத்தை பரப்பணுமினு. உழவன்களை கெடுத்தா உணவு கெடும். நாட்டிலேசகல பாபமும்சேரும். ஆமாம். அப்போதுதான் நமது சாம்ராஜ்யம் நிலை நிற்கும். இந்த உழவன் கஞ்சியை திருடிக் குடித்து விடு கிறேன். அதனல் அவன் திட்டுவான். பாவம் சேரும்.

(மறைந்துசென்று, கஞ்சியை குடித்துவிடுகிறது.)

(பச்சை வருகிருள்.)

**பச்:—** ஏ மச்சான்! சாப்பிடுவ வா. (கஞ்சிக் கலயத்தைக் காணுது) மச்சான்! ஓடியா ஓடியா கஞ்சிக் கலயத்தைக் காணேமே!

**கந்:—** கலயத்தைக் காணே........மா? போறது கஞ்சியைக் கொண்டா!

**பச்:—** கலயமே இல்லங்கறேன். கஞ்சி எப்படி இருக்கும்?

**கந்:—** ஆகா, அப்படியா சங்கதி? இத அப்பவே சொல்றதுக்கு என்ன? இன்னேரம் என்ன பண்ணி இருப்பேன் தெரியுமா?

**பச்:—** என்ன பண்ணி இருப்பே?

**கந்:—** என்னவா? இன்னும் 2 சால் கவலே ஓட்டி இருப்பேன், பாவம் எவ்வளவு பஞ்சம் வந்தா கஞ்சியைத் திருடுவாங்க?

**பச்:—** ஏனுங்க, இப்பதான் ஒரு யோசனே வரது, அந்த வாத்தியாரு இப்படி போருரே,ஒருவேளே அவரு....

**கந்:—** அடச்சீ! பாவம் வயித்துக்கு இல்லேன்னுகூட வெள்ளேயா சட்டை போட்டுகிட்டு. யார் கிட்டயும் கேக்காம, உசிரவேணும்னுலும் விடுவாங்க வாத்தியாருங்க. இந்தமாதிரி அவங்கமேல........அத அவர் வர்ருரு, உளறிக் கொட்டாதிரு.

(ஆசிரியர் வருகிருர்)

**அன்:—** என்ன அது கூச்சல், கஞ்சிக் கலயம் காணேமா? பாருங்க பஞ்சம் எவ்வளவு மிஞ்சி இருக்கிறது? அம்மா நீ ஒண்ணும் மனசிலே வைக்காதே விடு. அந்தப் பாவம் செய்தவர்க்காக பரிதாபப்படு. அதனுல்கிடைக்கிறபுண்ணியம் உங்களுக்குதானே?

**கந்:-** ஆமாய்யா! நல்லா சொன்னீங்க. ஒரு வேளை சாப்பிடலைன்னு செத்துப் போகமாட்டேன், நாள் கணக்கிலே சாப்பிடாதவங்கோ எத்தனையோ பேர்! தண்ணியாவது குடிச்சிடறேன்!

**அன்** :-கேளப்பா கந்தசாமி! (பாடுகிறார்)

(சாதிமத மேடுபள்ளம் பாட்டின் தொடர்ச்சி)

உணவுக்குழைத்திடுவார் உழவர்களாம்-வயிறு
உறங்காதிருக்க என்றும் உதவுவாராம்
குணத்தை வளர்த்திடுவார் ஆசிரியர்-உம்
கூடப்பணி புரிகிறமா பெரியார் (சாதி)

சற்று வேலையிருக்கிறது பிறகு வருகிறேன் (போகிறார்.)

**(குட்டிப் பேய் ஒருபுறமாக நிற்கிறது.)**

**குட்டி:**-அடடா! திட்டுவான் என்று எண்ணினேன். பரிதாபப்படுகிறானே, இந்தப் பாவி! — பாவியல்லவே — புண்ணியவான்! சரி ராசா பேயிடம் சொல்லிடுவம் நடந்ததை.

(குட்டிப்பேய் அரச பேயிடம் ஓடுகிறது.)

**காட்சி முடிகிறது.**

**காட்சி : 2** **இடம் ; சுடுகாடு.**

(அரசபேய் கம்பீரமாக உட்கார்ந்திருக்க, குட்டிப்பேய் மரியாதையுடன் ஓடிவந்து நிற்கிறது.)

**அ.பேய்:**-காயா, பழமா?

**குட்டி:-** காயா இருந்தால்கூட பரவாயில்லைங்க. மஞ்சிலே போட்டாவது பழுக்க வைக்கலாம். இதுலேதான் அரும்பு இருக்கிற இடம்கூடத் தெரியலையே!

**அ பேய்:**-ஆ! அப்படியா! என்ன தைரியம் உனக்கு! என் எதிரே இப்படிவந்து,

(பாடுகிறது.)

**அடநந்தா உனக்கு இந்த மதி என்ற மெட்டு.**

பயமில்லாமலே எதிரே இங்கு நில்லாதே
வாயை மெல்லாதே
பயலே நீமுடியலே என்று சொல்லப் படுமோடா
வரப் படுமோடா, நிற்கப் படுமோடா மடப் (பயலே)

நயமாகப் பேசியே ஓடு — அந்த
நல்லவனை உன்வலையில் போடு
நமது சாம்ராஜ்ய வழி தேடு
நல்லபடி செய்யாவிடில்
கொல்லுவேன் உன் உயிர் ஈடு. (பயலே)

உலகத்தார்க்கு ஆணிவேர் உழவர்கள். அவர்களைக் கெடுத்தால்தான் நமது சாம்ராஜ்யம் நிலைநிற்கும் என்று உனக்கு எத்தனைமுறை ஓதினேன்? அற்பனே ! அந்த உழவனுக்கு எப்படி இவ்வளவு புத்தி வந்து விட்டது ? எந்தப் பள்ளிக்கூடத்திலே படிச்சான் அவன்?

**குட்டி:—** வீட்டுக்கே இல்லை வாத்தியாரு வந்துவிட்டாரு. வயலிலே வந்தில்லே பேசுறாரு !

**அ. பேய்:—**சரிதான் போ. பாடங்க பள்ளிக்கூடத்தைத் தாண்டி, வயல் வரைக்கும் வந்திட்டதா? நாம் பொழச்சாப்பலேதான். மறுபடியும் ஓடு; வேறே வழி தேடு.

**குட்டி:—** அடுத்துக்கெடுப்பதுதாங்க சுலபம். ஒரு வேலைக் காரனாகி பாருங்களேன் பிறகு ... (போகிறது)

காட்சி முடிகிறது

**காட்சி : 3** **இடம் : கந்தன் வீடு.**

(கந்தன் கட்டிலில் படுத்திருக்கிறான். பச்சை கால் வருடு கிறாள். குட்டிப்பேய் வேலைக்கார சிறுவன் உருவில் பாடிக்கொண்டு வருகிறது.)

**ஐயே மெத்தக்கடினம் என்ற மெட்டு.**

**குட்டி:**—ஐயா உங்களடிமை ஆதரியுங்கள்
ஐயா உங்களடிமை (ஐயா)
மெய்யாக வேலைசெய்யும்
பையனாக இருப்பேன் (ஐயா)

ஐயா ! ஒரு வேளை கூழ் ஊத்துங்க போதும். உங்க வேலை எல்லாம் நான் ஒருத்தனே நாள்முழுதும் நாயாட்டமா காவல் இருந்து, கழுதையாட்டமா முழுதும் செய்கிறேன்.

**கந்:**— டேய், சீ, பொக்கிப்பயலே! இத்தனைநாள் நான் கழுதையாட்டமா கஷ்டப்பட்டேங்கறயா !

**பச்:**— என்னங்க, பையன் அடக்க ஒடுக்கமா குண்டுசட்டி குதிரைமாதிரி இருக்கிறான். இவனை வச்சிக்கிட்டா உங்களுக்கும் ஓய்வு கிடைக்கும். அப்படீ மத்தி யான வெயிலிலே, மரத்து நிழலிலே, வாயாரப் பேசலாம் !

**கந்:**— சரி சரி இருந்துடப்பா ! சத்தி வரங்குடுத்த பிறகு சிவன் என்ன செய்கிறது?

**பச்:**— தம்பீ ! எல்லா வேலையும் உன் இஷ்டம்போல செய். அடிக்கடி வந்து தலையை நீட்டாதே. நாங்க ஏதோ முக்கிய வேலையில் இருப்பம். சிவபூஜையில் கரடி மாதிரி கெடுக்காதே.

**குட்டி:**—என்னங்க, இதுகூடவா தெரியாது எனக்கு ?
(பாடுகிறது.)

(படித்தானே பலபல கலைகளை எ. மெட்டு.)

சமயம்தனை அறிந்து நடப்பேன் நானே
எசமானனுக்கும் சமுசாரத்திற்கும் தகுந்த (சமயம்)
இமயமலை கரையும் வெயிலு எரிக்குது
இளம் பயிர்களை எல்லாம் தீய்த்துக் கரிக்குது
நன்செய் நிலத்தெதுவும் நன்மை சேராது
புன்செய் பயிரையன்றி விளைவு வாராது. (சமயம்)

**பச்:–** சரி சரி போய் வேலையைப் பாரு.

(குட்டிப்பேய் போகிறது.)

காட்சி முடிகிறது.

**காட்சி : 4** **இடம் ; வயல் மனை.**

(2 ஆண்டுகள் கழிகின்றன. கந்தன் வயலைச்சுற்றி வருகிறான். குட்டிபேய்ச் சிறுவன் கும்பிடுகிறது.)

**குட்டி:–** பாருங்க போனவருஷம் மற்றவர் பயிர்கள் எல்லாம் வெயிலினாலே உலர்ந்தன, தீய்ந்தன, கருகின, பள்ளமான நிலத்தில் புன்செய்ப் பயிர் செய்தோம். நல்ல விளைவு கண்டது; தானியம் பல பரணி கொண்டது! இந்த வருஷம் புன்செய் நிலத்திலே நன்செய்ப் பயிர் செய்திருக்கிறேன். எங்கும் அடை மழை. மற்றவர் பயிர்கள் அழுகிவிட்டன. நமது பயிர் நல்ல விளைவு!

**கந்:–** தம்பீ! நீ மிக நல்லவண்டா! வீடு கொள்ளாத தானியம் வெளஞ்சிச் கெடக்குது. இதை என்ன செய்யலாம்?

(பச்சை வருகிறாள்.)

**பச்:–** என்னங்க, எங்கேயோ பிளாக் மார்க்கட்டுன்னு இருக்குதாம். அங்க நல்ல விலையா விக்குதுங்களாம். வித்தா அப்படி ஒரு காசுமாலையாவது ஆகும்.

**கந்:—** உன்கழுத்துக்கு காசுமாலே! மத்தவங்க வயித்துக்கு நாசவேலே !

**குட்டி:—** ஐயா ! வெறும் தானியம் வயிற்றுப் பசியை மட்டும் தான் தீர்க்கும். நான் ஒரு புது வழி சொல்றேன் அதனாலே பஞ்சத்தையே கூட மறந்திருக்கலாம் !

**கந்:—** அது எப்படியப்பா ?

(குட்டிப்பேய் சாராய புட்டியைத்தர) ஏம்பா! இது என்ன சாராயமா? ஒரே நாற்றம், குமட்டுது. சரி, நீ சொல்றதாலே கொஞ்சம் பாக்கறேன்.

**(கடகட என்று குடிக்கிறான் ஆசிரியர் வருகிறார்.)**

யாரு, வாத்தியாரா ? ரொம்பநாளா இந்தப்பக்கமே காணுமே ! ஐயாவுக்கு யாரு குடுப்பாங்க இந்தப் பஞ்சகாலத்திலே ? அவராலேயும் வாங்க வசதி யில்லே. டே, அவருக்கும் போடரு பூப்போட்ட கிளாசிலே !

**அன்:—** குடியைக் கெடுத்து குற்றமும் தரும் மதுதானே இது ? கந்தசாமி, கெட்டுப்போவதற்கு கடகால் போடாதே !

**கந்:—** ஏய்யா, நான் குடுத்ததும் குடிக்கலே, நான் சந்தோசப்படறதும் உமக்குப் பிடிக்கலே !

**அன்:—** அறிவைக் கெடுக்கும் இதில் என்னப்பா அற்ப சந்தோஷம்?

**கந்:—** சரிதான், என்னை அறிவில்லாதவண்றே ! ஐயா ! வாத்தியாரையா ! நீங்க வேறே நல்ல சமயம்பாத்து அப்புறம் வாங்க. பாவம் சம்பளம் இன்னும் வாங்கலேபோலிருக்குது. அதான் சூடா — ஒரு மாதிரியா—குஷியில்லாம இருக்கிறார் !

**அன்:—** கந்தசாமி! உன்னைப் பொறுத்தவரையிலும்.

(பாடுகிறார்.)

**டடடா மெட்டு.**

வள்ளுவர் வாழ்ந்தும் பயனில்லை
வந்த சுதந்திரம் பயனில்லை
கள்ளினை விடவே மனமில்லை
கண்ணெதிர் கண்டும் குணமில்லை

ஏனென்றால்

மதுவை குடிக்கும் வேலையே
மதியை கெடுக்கும் வேலையே

குடித்தால் அழிவாய் விடுத்தால் உயர்வாய்
படித்தோர் பகர்வதைக் கேளு கேளு. (மதுவை)

**கந்:—** மதியைக்கெடுக்குமா இருந்தா கெடுக்கட்டும். ஐயா! நீங்க வேறே வேலையிருந்தா பாருங்க சொல்லிட்டேன்.

**அன்:—** சரியப்பா, பிறகு வருத்தப்படாதே நானும் சொல்லி விட்டேன். வருகிறேன்.

(போகிறார்.)

காட்சி முடிகிறது.

**காட்சி : 5** **இடம் : கந்தன் வீடு.**

(கந்தன், பச்சை குடித்து ஆடுகின்றனர். குட்டிப்பேயும் அரசபேயும் மறைந்து பேசுகின்றன.)

**அ.பேய்:—** அடடே! கந்தன் மொந்தைக்குடியனாகி, மொடாக் குடியனாகி, பீப்பாய்க் குடியனாகவும் மாறிவிட்டானே! பலே! இதென்ன இது! நன்றாககுடித்து, கையிலிருந்த வடையை விடுத்து, கீழே இருந்த தவளையைப் பிடித்து, நறுக் என கடித்துவிட்டானே. ஜோரு! கீச் கீச் என்கிறது தவளை!

**கந்:—** ஆம், நான் அரையணுகுடுத்து வாங்கின வடையே! நீ கீச் கீச்னு கத்தினு உட்டுடுவனு உன்னே? 'நறுக், நறுக்'

(தவளை கீச்........ கீ....... ச் என்றது)

**பச்சை கொஞ்சம் சாராயத்தை தவறி ஊற்றிவிடுகிருள்**

ஏண்டி மட்டி! உன் கண் என்ன அவிஞ்சாபோச்சி! உயர்ந்த சாராயத்தை ஊத்திட்டியே! மகாராஜா மகள்! கொட்டி மெழுகரு! என்னே யாருன்னுடி நினைச்சே?

(பாடுகிருன்.)

**அழகில் எனைப்போல் யாருண்டு என்ற மெட்டு.**

சமர்த்தில் எனைப்போல் யாருண்டு சொல்லடி
சங்கீதமாகவே—சந்தோஷமாகவே
பாடும் — ஆடும். (சமர்த்தில்)

**குட்டி:—** பாருங்க. ஓநாய்களின் ஊளையை அச்சா! அச்சா! ஓநாய்கள் பன்றிகளாக மாறப்போகின்றன.

(ஆசிரியர் வருகிருர். பேய்கள் மறைகின்றன.)

**அன்:—** கந்தசாமி! கடைசி முறையாக வேண்டுகிறேன். விட்டுவிடு.

**கந்:—** நீயாரு எனக்கு புத்திசொல்ல? உன் வேலையைப் பாரு.. சம்பளத்துக்கு வேணும்னு சண்டைபோடேன். போமாட்டியா. பையா விரட்டு இந்த ஆளே!

(குட்டிப்பேய் வேலைக்காரனுக வருகிறது)

**குட்டி:—** இந்தாங்க இந்தப் புட்டியினுலே முட்டியைத் தட்டி அனுப்புங்க.

(குட்டிப்பேய் சாராயபுட்டியைத் தர, கந்தன் சாராயப் புட்டியினுல் அடிக்க, வாத்தியார் முகமெல்லாம் வழிந்தது. குப் என்று நாற்றம் நிறைந்தது. விரைவாக வெளியேறினுர் ஆசிரியர்.)

**கந்:—** அடபாவி! தனக்கும் குடிக்க தெரியாது. குடிக்கற வங்களைபாத்து பொருமை படருரு பொருமை. ஏண்டீ! அந்த பையனுக்கு பெரிய சீசாவிலே நீதானே சாராயம் தந்தே ?

**பச்:—** ஆமாம்!

**கந்:—** என்ன ஆமாம், உன்னை யாருடி தரச்சொன்னது ?

**பச்:—** உன்னை யாருடா கேக்கச் சொன்னது?

**கந்:—** அடாண்ணு சொல்றே?

**பச்:—** அடீண்ணு சொல்றே?

(கும்கும்மு, தப்பு திப்பு என அடித்துக்கொள்கின்றனர்)

**பச்:—** ஐயோ, அம்மா, ஐயையே, கழுதையைப் புடிக்கிருனே, எம்மா ...... வ்!

(ஒரு சப் இன்ஸ்பெக்டரும், இரு போலீஸ்காரரும் வருகின்றனர். குட்டிப்பேய் மறைகிறது)

**இன்:—** டேய் 144! அவனை விடாதே பிடி. அவளையும் நிறுத்து.

**கந்:—** ஐயையா! நான் உங்கொப்பாணை குடிக்கலே. இருக்கற சரக்கை உனக்கே ஒணும்ணுலும் தந்துட ரேன் உட்டுடு, உட்டுடு. உடமாட்டிங்களா!

(போலீஸ்காரர் இருவரும் பிடித்து நிறுத்துகின்றனர்.)

**இன்:—** ஏ புள்ளை, புருசனை திட்டி அடிக்கிறயே ஞாயமா ?

**பச்:—** மச்சான்! உன்காலிலே உழறன். உன்னை ஒண்ணும் பேசலேன்னு சொல்லிடேன். மனசிலே ஒண்ணும் வைக்காதே, சொல்லு, சொல்லேன் ....

**கந்:—** ஐயா! எங்களை செயிலுக்கு அனுப்பாதெங்கோ. பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவங்க. கவுரவம் பறந்து பூடும்.

**இன்:**— பெரிய குடும்பம்னு 4 நல்ல மனிசர் தெரிஞ்சவங்க இருக்கணுமே. ஜாமீன்தர யார் இருக்கிறுங்க?

**பச்:**— ஐயையோ! அந்த வாத்தியாரு வந்தா தருவாரு. அவுரைத்தான் திட்டி அனுப்பிச்சியே படுபாவி!

(ஆசிரியர் வருகிறுர்)

அட, அதவர்ருரே அவர்! கும்புடபோன தெய்வம் குறுக்கே வந்ததாம்! சாமி! எங்களை நீங்கதான் காப்பாத்தணும்!

**அன்:**— உங்க பேச்சை எப்படியம்மா நம்புவது?

**கந்;**— சத்தியமா, உங்கொப்பாணை இனிமே லே குடிக்கவே மாட்டம்.

**அன்:**— (இன்ஸ்பெக்டரை நோக்கி) சார்! இந்தத் தடவை மட்டும் மன்னிச்சிடுங்க. மறுமுறை குடிச்சா நானே வந்து சொல்லிடறேன்.

**இன்:**— டேய் 144! 208! ஐயா சொல்ருரு. விடுங்க அவங்களை. மறுபடி ஏதாவது காச்மூச்னு அரெஸ்டு தான்! நாங்க வர்றம் சார். (போகின்றனர்)

(ஒருபக்கம் குட்டிப்பேயும் அரசபேயும் வருகின்றன.)

**அ.பேய்:**—நம்ம குடியைக் கெடுத்து, சாம்ராஜ்யத்தைக் கெடுத்துட்டாங்களே அந்த வாத்தியாரும் போலீ சாரும்! இப்பதான் தெரியுது இது மதுவிலக்கு இடம்னு. இங்க சர்க்காரும் அறிவாளிங்களும் ஒரே மனசா கண்டிப்பா இருக்கிறுங்க. நாம்ப வேறே இடம் பார்க்கலாம் வா.

(போகின்றன.)

**கந்:–** போலீசாருங்க போயிட்டாங்க. வாத்தியாரையா அவுங்களுக்கு சில்லரை கில்லரை ........

**அன்:–** சில்ல்ரை வாங்கினு கல்லறைதான் !

**கந்:–** ஆம், அவ்வளவு கண்டிப்பா இப்ப! அப்டின்னு இனி மேலே சத்யமா குடிக்கமாட்டம். அந்தப் பையன் எங்கே ?

**அன்:–** அறிவு விருகிற இடத்திலே அஞ்ஞானப்பேய் இருக்காது, அது ஓடிவிட்டது ! இனிமேல் வராது.

**பச்:–** அந்தப் போலீசாருக்கு நம்ம விஷயம் எப்படி தெரிஞ்சது?

**அன்:–** நீங்க சத்யம் வச்சதாலே சொல்றேன். அவங்க போலீசாரில்லே. எங்க பள்ளிக்கூட வாத்தியார்கள்! தீமையைத் திருப்பிட்டாங்க, உடனே திரும்பிட்டாங்க. தொப்பி, நிஜார் எல்லாம் அதோ பாருங்க கையிலே மூட்டையாப் போறது !

கந் } ஆ ............ !
பச் }

மூவரும் பாடுகின்றனர்.

**(நீநாம என்ற மெட்டு.)**

எல்லாரும் ஒன்று எனவே
எண்ணி வாழ இன்பம் சூழ
நல்லாரும் புகழும் வண்ணம்
நடப்பமடியே தங்கமே !

— சுபம் —

**குறிப்பு:**–டால்ஸ்டாயின் ஆங்கிலக் கதையின் தழுவல்.

விரைவில் வருகிறது.

# சிறுவர் விருந்து

(திரு. மா. முருகேசன் எழுதியது.)

1. **பொன்னி**

சென்னை இந்துஸ்தான்
வார இதழில் வெளிவந்த
சிறுவர் தொடர் கதை.

✻

2. **கற்சிலை**

சென்னை தினசரி மடல்
வார இதழில் வெளிவந்த
சிறுவர் தொடர் கதை.

✻

3. **குணசேகரர்**

ஆம்பூர் இந்து ஆரம்பப்பள்ளி
மாணவர் நடித்த நாடகம்.

✻

4. **வேள் பாரி**

பழந்தமிழ் வள்ளலின்
பெரும்புகழ் நாடகம்.

✻

வியாபாரிகட்குத் தக்க கழிவு தரப்படும்.
விளம்பரங்களுக்கும், விவரங்களுக்கும்,
விண்ணப்பிக்கவும்.

**திரு. மா. முருகேசன், ஆசிரியர்**
சான்றோர்குப்பம் தபால்,
ஆம்பூர். வ. ஆ. ஜி.

# மதிப்புரை

---

நாட்டுப் பாடல்களுடன் நற்கருத்துக்களை எடுத்துக் கூறும் இந்நாடகம் நன்னெறியில் ஆழ்த்தி நம்மை இன்பமுறச் செய்கிறது ஆசிரியரின் இம்முயற்சியைப் போல-நல்வாழ்வு வாழ ஊக்கம் அளிக்கும் நல்ல கருத்துக்கள் பொதிந்த நாடகங்களை இவர் வெளியிட பொதுமக்கள் ஆதரவளிக்க வேண்டுகிறேன்.

ஆம்பூர். 15-12-'52 } (ஒப்பம்) T. S. சங்கரன் M. Ed.
தலைமை ஆசிரியர்,
இந்து உயர்தரப்பள்ளி.

---

நமது சாம்ராஜ்யம் என்னும் இச்சிறு நூல் அரிய பெரிய கருத்துக்களைக் கொண்ட ஒரு நல்ல நூல். நாட்டுப் பாடல்களும், உலக வழக்கு உரை நடையும் விரவிய இந்நூல் பொதுமக்களின் கருத்தைக் கவர்வதாகும். பயிர்த்தொழிற் பாட்டாளியின் பாடு, குடியால் விளையும் கேடு, மதுவிலக்கிற்காக ஆசிரியர்களின் சேவை முதலிய உயரிய கருத்துக்கள் இந்நூலில் அடங்கி இருக்கின்றன. இதன் ஆசிரியர் நண்பர் மா. முருகேசன் அவர்கள் தமது நன்முயற்சியால் இந்நூலை இயற்றியுள்ளார். பொதுமக்கள் இந்நூற் பயனைத் துய்க்கும் முகத்தால் அவர்க்கு ஊக்கம் ஊட்டி, இதுபோல் இன்னும் பற்பல நூல்கள் இயற்றுதற்கு உறுதுணையாவார்களாக!

ஆம்பூர், 25–12–'52. } (ஒப்பம்) D. துரைராஜ் B. A., L T,
Principal,
Concordia High & [redacted] School.

# குளிர்ந்த பானங்கள்.

அன்பர்களின்

* தாகத்தைத் தணிக்கும் குளிர்ந்த பானங்கள்
* பசியைத் தணிக்கும் பழ வகைகள்
* அறிவுப் பசிக்கேற்ற அரிய பத்திரிகைகள்

எப்பொழுதும் கிடைக்கும்

* ஈடு இணையற்ற சோடா கலர்கள்
* திரு. மா. முருகேசன் எழுதிய

"நமது சாம்ராஜ்யம்"

எங்களிடம் கிடைக்கும்.

**V. G. ராஜன்,**

Prop :—V. C. ஜெகதீசன் & பிரதர்,

பஸ்ஸ்டாண்டு, ஆம்பூர்.

---

ஸ்டேஷனரி,

ஷாப் சாமான்கள்,

பீடி சிகரெட்டுகள்

கிடைக்குமிடம்:—

**G. மூர்த்தி & Co,**

ஜெனரல் மர்ச்செண்ட்,

பஜார், ஆம்பூர்.